## சனாதனத்திற்கு எதிரான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு;

# இனப் படுகொலையோடு ஒப்பிடுவது பி.ஜே.பி.யின் மதவெறி அரசியல்!

## ‘தி டிபேட்’ யூ டியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில் – பத்திரிகையாளர் எஸ்.பி.லட்சுமணன் கண்டனம்!

சென்னை, செப். 7–

**சாதிய வேறுபாடுகளை ஆதரிக்கும் சனாதனத்தை, சமூக நீதிக்கு எதிரான சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதை திசைதிருப்பி, இந்துக்களை இனப்படுகொலை செய்யச் சொல்கிறார் என்று பி.ஜே.பி.யினர் பேசுவது அர்த்தமற்றதும் அபத்தமானதும் மட்டுமல்ல... பி.ஜே.பி.யின் ஆபத்தான மதவெறி அரசியல் என்று பத்திரிகையாளர் எஸ்.பி. லட்சுமணன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக ‘தி டிபேட்’ யூ டியூப் சேனலுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:–

காங்கிரஸ் முக்த் பாரத் – காங்கிரஸ் இல்லாத இந்தியா உருவாக வேண்டும் என்ற ஜனநாயகத்துக்கு விரோதமான கருத்தை நாடுமுழுக்க சொல்லி வந்த பிரதமர் மோடி... கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலின் போது, மத்தியில் நல்லாட்சி நடத்துகிறோம்; கர்நாடக மாநிலத்திலும் அதே போன்ற ஆட்சி தொடர வேண்டுமானால், பி.ஜே.பி.க்கு வாக்களியுங்கள் என்று கேட்டார். இரட்டை ரயில் என்ஜின் என்றெல்லாம் இரண்டு அரசுகளை ஒப்பிட்டு வாக்கு கேட்டார்.

ஆனால், அவரது வார்த்தைகளைப் புறக்கணித்த கர்நாடக மக்கள், காங்கிரஸ் கட்சியை அபார வெற்றிபெறச் செய்து ஆட்சியில் அமர்த்தினார்கள். அதாவது அந்தக் கட்சியை எள்ளி நகையாடியதை கர்நாடக மக்கள் ஏற்கவில்லை. அப்போதிருந்தே பி.ஜே.பி.க்கு நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய ஓர் அச்ச உணர்வு ஆரம்பித்துவிட்டது.

எமர்ஜென்ஸியைவிட மோசமான கால கட்டத்தில் நாம் இருக்கிறோமோ என்று எண்ணத்தகுந்த அளவுக்கு, தன்னாட்சி அதிகாரத்துடன் சுயமாக இயங்க வேண்டிய ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகளை எதிர்க் கட்சிகளை, எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்கும் விதமாக, அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துவது; நடுநிலையோடு செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையத்துக்கு ஆணையர்களை நியமிக்கும் விஷயத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மையை கடைபிடிக்கும் வகையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை நீர்த்துப்போகச் செய்யும் அளவுக்கு அவசர சட்டத்தை அமல்படுத்தியது; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையிலான சட்டங்களைக் கொண்டுவருவது; மாநில உரிமைகளைப் பறிப்பது என தொடர்ந்து மக்கள் விரோத அரசாக தன்னை அடையாளப்படுத்தி வருகிறது பி.ஜே.பி. அரசு.

இத்தகைய பி.ஜே.பி. அரசை, ஆட்சியை வீழ்த்த வேண்டுமானால் கடந்த காலங்களைப்போல மூன்றாவது அணி என ஒன்று உருவாகி யாருக்கும் பயன்படாத சூழலை ஏற்படுத்திவிடாமல், அர்த்தமுள்ள பலமான எதிரணி அமைய வேண்டுமானால், காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய ஓர் அணி அமைவது அவசியம். அதுதான் பலமானதாக இருக்கும் என்ற கருத்தை முதன்முதலில் உரத்த குரலில் ஓங்கிச் சொன்னவர் தி.மு.க. தலைவர் ஸ்டாலின்.

காங்கிரஸ் கட்சியை முழுமனதோடு ஏற்க விரும்பாதவர்கள், ஆனால் பி.ஜே.பி.யை வீழ்த்த நினைப்பவர்கள் என்ற பிரிவின் கீழ் வரும் பலம் மிக்க பல தலைவர்களையும் கட்சிகளையும் கூட ஸ்டாலினின் இந்த அறைகூவல் அசைத்துப் பார்த்தது. அதில் உள்ள யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, கடந்தகால கசப்பான அனுபவங்களையும் மனதில் கொண்டு, அரவிந்த் கெஜ்ரிவால், அகிலேஷ் யாதவ், மம்தா பானர்ஜி போன்ற தலைவர்கள் எல்லாம் காங்கிரஸையும் உள்ளடக்கிய ஓர் அணியில் திரளக்கூடிய சூழலை ஏற்படுத்தியவர் ஸ்டாலின் தான்.

அந்தவகையில் இன்றைக்கு வலுவான ஓர் அணியாக உருவாகியுள்ள ‘இந்தியா’ கூட்டணிக்கு அடித்தளமிட்டவர் தி.மு.க. தலைவர் ஸ்டாலின். அவ்வப்போது சில கருத்து வேறுபாடுகள் தலைதூக்கினாலும், அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, எதேச்சதிகார ஆட்சி நடத்தும் பி.ஜே.பி.யை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளோடு, பாட்னா, பெங்களூரு, மும்மை என அடுத்தடுத்து நடந்த கூட்டங்களில் உறுதியோடு பங்கேற்று வருகிறார்கள் ‘இந்தியா’ கூட்டணியில் இடம்பெற்றுள்ள தலைவர்கள்.

இவர்களுக்கு பதிலடி தரும் வகையில் தான் வாரிசு அரசியல் மற்றும் ஊழல் என்ற இரண்டு அஸ்திரங்களைக் கையிலெடுத்தார் பிரதமர் மோடி. ஆனால், அவரைத் தவிர பி.ஜே.பி.யின் முக்கிய தலைவர்கள் அத்தனைபேரின் வாரிசுகளும் அரசியலில் கோலோச்சுகிறார்கள் அல்லது அவர்களின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வேறு துறைகளில், அமைப்புகளில் அதிகாரம் செலுத்துகிறார்கள். இது மக்களுக்கும் புரிந்



ததால்தான் அந்த வாதம் அவ்வளவாக எடுபடவில்லை.

அடுத்தது ஊழல்.... ஊழல் செய்வதைவிட ஆபத்தானது ஊழல்வாதிகளைப் பாதுகாப்பது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எவர் வேண்டுமானாலும் எத்தனை கோடி ஊழலிலும் ஈடுபடலாம்... அவர்கள் பி.ஜே.பி.யில் இணைந்துவிட்டாலோ, பி.ஜே.பி.யை ஆதரித்தாலோ அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் பாயாமல் பி.ஜே.பி. ஆளும் ஒன்றிய அரசு பார்த்துக்கொள்ளும். தமிழ்நாடு தொடங்கி மகாராஷ்டிரா வரை இதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

எந்த அஜித்பவார் மீது பிரதமர் மோடி ஊழல் குற்றம் சுமத்தினாரோ, அதே அஜித் பவாரை அடுத்த சில வாரங்களில் துணை முதல்வராக்கி அழகு பார்த்த கட்சிதான் பி.ஜே.பி. அந்த அஜித் பவார் இப்போது புனிதராகிவிட்டார். எந்த சட்டத்தைச் சொல்லி செந்தில்பாலாஜி மீது நடவடிக்கை எடுத்தார்களோ அதே சட்டத்தை அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் மீதும் அமல்படுத்தாமல் வேடிக்கை பார்க்கும் கட்சிதான் பி.ஜே.பி. ஆக ஊழலைப் பற்றிப் பேச பி.ஜே.பி.க்கு தார்மீகத் தகுதியில்லை.

ஏழை மக்கள் பயன்பெறும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ஏழரை லட்சம் பேர் ஒரே மொபைல் நம்பரை பதிவு செய்து பலகோடி ரூபாய் இழப்பீடு பெற்றிருக்கிறார்கள்; இறந்தவர்களுக்கு சிகிச்சை அளித்ததாகச் சொல்லி பல கோடிகளை சுருட்டியிருக்கிறார்கள்; திட்ட மதிப்பீட்டை விட பதினைந்து மடங்கு அதிகமாக நிதி ஒதுக்கி பல்லாயிரம் கோடிக்கு சாலை அமைத்திருக்கிறார்கள், சுங்கச் சாவடிகளில் முறைகேடாக பணத்தை இழந்திருக்கிறார்கள்... முறைகேடாக பணத்தை வசூலித்தும் இருக்கிறார்கள்.. என்றெல்லாம் முறைகேடு களை விவரித்து சுமார் ஏழரை லட்சம் கோடி அளவுக்கு மோசடி நடந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக மத்திய தணிக்கைத் துறை அறிக்கை வெளிவந்து பல வாரங்கள் ஆகியும் பி.ஜே.பி. கள்ள மௌனம் சாதிக்கிறது. பிரதமர் மோடி இது பற்றி வாய் திறக்க மறுக்கிறார். இந்த லட்சணத்தில் ஊழலைப் பற்றிப் பேச பி.ஜே.பி.க்கு என்ன தகுதி இருக்கிறது?

இப்படி ‘இந்தியா’ கூட்டணியை விமர்சிக்க தாங்கள் எடுத்த ஆயுதங்கள் முனை மழுங்கியதால்தான், உதயநிதி பேசாத ஒரு விஷயத்தை பேசியதாகச் சொல்லி மத அரசியலை கையிலெடுத்திருக்கிறது பி.ஜே.பி.

சாதி சமய வேறுபாடுகளை தொடரச் செய்யும் சனாதனத்தை; சமூக நீதிக்கும் சமதர்மத்துக்கும் எதிரான சனாதனத்தை எதிர்ப்பதோடு நிற்கக் கூடாது, ஒழிக்க வேண்டும் என்று உதயநிதி பேசினார். இதில் என்ன தவறு இருக்கிறது? நானும் ஒரு இந்துதான். இதில் இந்து மதத்திற்கு எதிராக என்ன இருக்கிறது? மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். மனிதர்களை சமமாக நடத்த வேண்டும் என்று எந்த மதம் சொன்னாலும் அதை வரவேற்கலாம். அதற்கு எதிரான கருத்துக்களை எந்த மதம் சொன்னாலும் அதை எதிர்க்கலாம்.

மனிதனை மனிதனாக, மரியாதை உள்ளவனாக, சமநிலையில் வைத்துப் பார்க்க விரும்பாத சனாதனத்தை ஒழிப்போம் என்று ஒருவர் சொன்னால், அத்தகைய கருத்துக்கள் சனாதனத்தில் எங்கே இருக்கிறது காட்டுங்கள் என்று கேட்பதுதான் சரியான வாதமாக இருக்குமே தவிர... அப்படி இல்லை என்றால் அதை நிரூபித்து வாதாட வேண்டுமே தவிர, ஒருவர் பேசிய பேச்சை திசைதிருப்பும் வகையில் அவர் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்வது எந்த வகையில் நியாயம்?

சமூக நீதிக்கு எதிரான சனாதனத்தை ஒழிப்போம் என்று சொன்னதை இந்துக்களை இனப்படுகொலை செய்யச் சொன்னதாக அர்த்தம் கற்பிப்பது அபத்தமானதும், அர்த்தமற்றதும் மட்டுமல்ல... ஆபத்தான அரசியலும் கூட. அரசியல் விழிப்புணர்வு இல்லாத மக்களிடம் இப்படி மத உணர்வைத் தூண்டிவிட்டு ஒரு ரத்த ஆறு ஓடுவதைத் தான் பி.ஜே.பி. விரும்புகிறதா? இந்தியா கூட்டணியின் உருவாக்கம் பி.ஜே.பி.க்கு ஒரு வித பதற்றத்தை ஏற்படுத்தும் என்றுதான் நினைத் திருந்தேன். ஆனால், உண்மைக்கு மாறான ஒரு விசயத்தைச் சொல்லியாவது அரசியல் செய்யுமளவுக்கு பி.ஜே.பி.க்கு பயத்தை ஏற்படுத்தியிருப்பதை இப்போது உணர்கிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும். ஏதோ இந்துமதத்திற்கு, இந்து மதத்தவர்க்கு ஒரே ஆபத்பாந்தவன் பி.ஜே.பி. தான் என்ற பிம்பமே மோசடியானது; உண்மைக்கு மாறானது. இந்து மதத்தைப் பாதுகாக்க எவர் தயவும் தேவை இல்லை.

நீட் தேர்வால் பாதிக்கப்படுபவர்கள்... மருத்துவ மேற்படிப்பில் இடஒதுக்கீடு இல்லாததால் பாதிக்கப்பட்டவர்கள், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததால் இறுதித் தீர்ப்பு வந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் காவிரி நீருக்காக ஏங்கும் தமிழக விவசாயிகள், விஸ்வகர்மா யோஜனா என்ற பெயரில் குலத் தொழில் திணிப்புக்கு ஆளாகும் பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள்... இவர்களில் என்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்துக்கள் என்பது இந்துக்கள் மீது கரிசனம் உள்ளதாகக் காட்டிக்கொள்ளும் பி.ஜே.பி.க் குத் தெரியவில்லையா?

அப்போதெல்லாம் கள்ள மௌனம் காத்து, வேடிக்கை பார்த்த பி.ஜே.பி., தேர்தல் வரும் நேரத்தில் மத அரசியலைக் கையிலெடுத்து அந்த மக்கள் மீது வன்முறையைத் திணிப்பதுபோல நடந்துகொள்வது எந்த வகையில் சரியாகும்?

பி.ஜே.பி. அரசின் ஊழல்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் வெளியான சி.ஏ.ஜி. அறிக்கை பற்றி முதல்வர் ஸ்டாலினும், அமைச்சர் உதயநிதியும் பல முறை பேசிய போதெல்லாம் வாய்திறக்காத பி.ஜே.பி.யினர் இப்போது ஓடோடி வந்து மத அரசியல் செய்ய விரும்புவதை எப்படி அனுமதிப்பது?

இதே அமைச்சர் உதயநிதி நீட் தேர்வு எந்தளவுக்கு ஏழை மற்றும். நடுத்தர வர்க்க மாணவ, மாணவிகளை பாதிக்கிறது... பல்லாயிரக் கணக்கானவர்களின் மருத்துவராகும் கனவைக் கலைக்கிறது என்று பேசிய போது எட்டிப்பார்க்காத பி.ஜே.பி.யினர்தான் இப்போது மதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, ஆபத்தான அரசியலை முன்னெடுக்கிறார்கள். இவர்களது முகத்திரையைக் கிழிக்கும் வகையில் மக்களிடம் இந்த விஷயத்தில் இவர்களை அம்பலப்படுத்துவது ‘இந்தியா’ கூட்டணியைச் சேர்ந்த கட்சிகளின் தலையாயக் கடமையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு எஸ்.பி.லட்சுமணன் அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

# வீராம்பட்டினத்தில் கலைஞர் திருவுருவச் சிலை!

## ஆ. இராசா, எம்.பி., திறந்து வைத்து சிறப்புரை!

புதுச்சேரி, செப்.7-

புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக் கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பா. செ.சக்திவேல் தலைமை தாங்கினார். தொகுதி செயலாளர் வ. சீத்தாராமன் வரவேற்று பேசினார்.

முன்னாள் செயற்குழு உறுப்பினர் பூ.சு. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் நா. கோபாலகிருஷ்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆ. ஜெ. அருண்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கி. சங்கர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஜெ. வேலன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர். கே. கலிவரதன், மீனவர் அணித் தலைவர் மா. ரமேஷ் (எ) தில்லையப்பன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை அமைப்பாளர் ரா. தியாகராஜன், தொகுதி அவைத் தலைவர் ர. பாண்டியன், துணைச் செயலாளர்கள் க. சிலம்புச் செல்வன், த. ராஜேந்திரன், வீ. நந்தினி, பொருளாளர் க. மெய்யழகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கு. வினோத்குமார், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சு. முகுந்தன், மீனவரணி துணை அமைப்பாளர்கள் த. சுப்புராயன், நா. மதிவாணன், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர். சே. பாலபாரதி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் அ. ஜபருல்லா, தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க. அரசு, செயற்குழு உறுப்பினர்கள் சி. மதுரைக்குமார், சி. ஜீவானந்தம், சி. குமார், பா. விஜயமுருகன், மூ.ரமேஷ், சு.சேரலாதன், க.சேதுபதி, சு.பரூக் (எ) ஆறுமுகம், அ.அருணாச்சலம், வ.பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா ஆகியோர் கலந்து கொண்டு, கலைஞர் நூற்றாண்டு விழாயையொட்டி நிறுவப்பட்டுள்ள கலைஞர் முழு உருவச் சிலையை திறந்து வைத்து, ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ.,, துணை அமைப்பாளர்கள் எ.கே. கல்யாணி குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ.மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி,

அ. சோமசுந்தரம், ந. தங்கவேலு, ப. செல்வநாதன், சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ்,

தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிட மணி, இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவ க்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே.ராதா கிருஷ்ணன், ம.கலைவாணன், ச.அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் முடிவில் மாநில பிரதிநிதி பா.செ.தினகரராசு நன்றியுரை ஆற்றினார்.




கழகத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் தலைமையில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள் பி.டி.சி.வெ.பாலு, ராஜா குப்புசாமி, ஆர்.வரதன், கொல்லாபுரம் ராஜேந்திரன், ராஜகாந்தன், சேலம் காசி, கோவை தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.